செ.வெ. எண்: 238 நாள்: 28.03.2012

## பத்திரிக்கை செய்தி
## சில்லரை விற்பனையில் ரூ.201 கோடி கோ–ஆப்டெக்ஸ் சாதனை

தமிழ்நாட்டிலுள்ள பிரதம கைத்தறி சங்கங்களின் தாய்ச் சங்கமாக திகழும் கோ–ஆப்டெக்ஸ் நிறுவனம் தனது இந்தியா முழுவதிலும் உள்ள 203 விற்பனை நிலையங்கள் மூலமாக விற்பனை செய்து, தமிழக நெசவாளர்களுக்கு தொடர்ந்து வேலை வாய்ப்பு வழங்குவதுடன் 2011–12 ஆம் ஆண்டு ரூ.201 கோடி சாதனை விற்பனை செய்து வரலாறு படைத்துள்ளது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் ஆலோசனைப்படி செயல்படுத்திய இரண்டு வாங்கினால் ஒன்று இலவசம் என்ற திட்டத்தின் பலனாக கோ–ஆப்டெக்ஸ் அதன் 77 ஆண்டுகள் வரலாற்றில் இல்லாத வகையில் ரூ.200 கோடிக்கு மேல் சில்லரை வணிகம் செய்து சாதனைப் படைத்துள்ளது. 2010–11 ஆம் ஆண்டின் சில்லரை விற்பனை ரூ.198 கோடி ஆகும். கடந்த ஆண்டு கோ–ஆப்டெக்ஸின் மொத்த விற்பனை ரூ.621 கோடி ஆகும். இந்த ஆண்டு கோ–ஆப்டெக்ஸின் மொத்த விற்பனை ரூ.1000 கோடிக்கு மேல் இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

கோ–ஆப்டெக்ஸில் சிறந்த வடிவமைப்புகளுடன் கூடிய பட்டுப் புடவைகள், பாரம்பரியமிக்க பருத்தி புடவைகள், வேட்டிகள், போர்வைகள், படுக்கை விரிப்புகள் போன்ற இரகங்கள் கிடைக்கும் என்பது அனைத்து தரப்பு வாடிக்கையாளர்களும் அறிந்த ஒன்றாகும். வேகமாக மாறிவரும் நாகரிகத்தின் தேவைக்கேற்ற வகையில் புதுப்புது வடிவமைப்புகளின் வாடிக்கையாளர்களை கவரும் வகையில் துணி இரகங்களை அறிமுகம் செய்து தொடர்ந்து வாடிக்கையாளர்களின் பேராதரவினை பெற்று வருகிறது. கோ–ஆப்டெக்ஸ் தற்போது தனது விற்பனை நிலையங்களை வியாபாரத்திற்கு உகந்த இடத்திற்கு மாற்றியமைத்தல் மற்றும் இளைய தலைமுறையினரை கவர்ந்து ஈர்க்கும் வகையில் நவீனப்படுத்தி அதன்மூலம் விற்பனையை அதிகரிக்கும் உன்னத நோக்கில் விற்பனை நிலையங்களை திறந்து வருகிறது.

கோ–ஆப்டெக்ஸ் 2.4.2012 அன்று **நிறுவன தின** முன்னிட்டு இரண்டு வாங்கினால் ஒன்று இலவசம் என்ற புதிய திட்டத்தினை அறிமுகப்படுத்தியது. இத்திட்டம் வாடிக்கையாளர்களிடையே மிகுந்த வரவேற்பினைப் பெற்று அதிக அளவிலான வாடிக்கையாளர்கள் துணி இரகங்களை வாங்கும் எண்ணத்தோடு கோ–ஆப்டெக்ஸ் விற்பனை நிலையம் வந்து குவிந்தது சிறப்பானதொரு புத்துணர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

கோ–ஆப்டெக்ஸ் தனது தொடர்ந்த முறையான திட்டங்களினாலும், வெளிப்படையான வியாபார முறைகளினாலும் கோ–ஆப்டெக்ஸ் இந்த வருடத்தில் ரூ.201 கோடி சில்லரை விற்பனை செய்தமைக்கு வாடிக்கையாளர்கள் தந்த ஒட்டுமொத்த ஒத்துழைப்பே காரணமாகும்.

கோ–ஆப்டெக்ஸ், கைத்தறி நெசவாளர்கள், வாடிக்கையாளர்கள், பணியாளர்கள் பத்திரிக்கையாளர்கள் மற்றும் தொலைக்காட்சி துறையினர் ஆகியோர் தந்த ஒத்துழைப்பின் காரணமாகவே, கோ–ஆப்டெக்ஸ் தனது வரலாற்றில் இத்தகைய ஒரு சாதனையை நிகழ்த்த முடிந்தது. எனவே அனைவருக்கும் தனது நெஞ்சார்ந்த நன்றியை உரித்தாக்கி கொள்கிறது.

btëpL: -

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**